**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP. No.7/2022**

**PW – 1**

**நாள் 13.02.2025.**

| | |
|---|---|
| **Name** | பழனிசாமி |
| **Father Name** | சின்னசாமி |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2025.)**

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து சமயம் நான் மட்டும் தான் ஆட்டோவில் பயணம் செய்தேன். அப்போது இரவு 7.45 மணி இருக்கும். அப்போது ரோட்டின் முன்புறம் எவ்வித சமிக்ஞையும் இல்லாமல் தென்னைமர லோடுடன் நின்று கொண்டிருந்த 407 டெம்போவின் பின்புறமாக நான் சென்ற ஆட்டோ மோதி விட்டது. நான் சென்ற ஆட்டோ மிதமாக தான் சென்றது என்றால், ஆட்டோ கொஞ்சம் வேகமாக தான் சென்றது. எந்தவொரு எச்சரிக்கை விளக்கும் இல்லாத நிலையில் நடு ரோட்டில் நின்ற 407 டெம்போவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆட்டோவின் ஓட்டுநர் மிதமாக தான் ஆட்டோவை ஓட்டிச்சென்றார் என்றும், இந்த வழக்கிற்காக வேண்டி ஆட்டோ ஓட்டுநருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்தஆட்டோவின் ஓட்டுநருக்கு முறையான பணி வில்லை (Badge) இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆட்டோவின் ஓட்டுநர் அவருக்கு ஓட்டுநர் பணிவில்லை இல்லாததால் அது காப்பீட்டு விதிமுறையை மீறிய செயல் என்பதால் காப்பீட்டு நிறுவனமான 3–ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்தவிதமான இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு விபத்தின் விளைவாக எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் தான் நான் தொடர்சிகிச்சை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆம்புலன்ஸ் வாடகை பில்லில் கண்ட தேதிக்கும், நான் அங்கு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்ட தேதிக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லாததால் அந்த வாடகை பில் வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் இந்த வழக்கில் அதிக இழப்பீடு பெற வேண்டி போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் எந்தவொரு வேலையும் செய்யவில்லை என்றும், இந்த நிலையில் மாதம் ரூ.15,000/- வருமானம் பெற்று வந்ததாக மனுவில் சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்திற்கு நடு ரோட்டில் எவ்வித முன்னெச்சரிக்கை விளக்கும் இல்லாத நின்றிருந்த TN 43B 9607 என்ற வாகனத்தின் அஜராக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இழப்பீட்டு மனுவானது 3-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.02.13 19:39:59 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**